# நாகப்பட்டினம் – காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை நாளை ஆரம்பிக்கப்படுமென உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



நாகப்பட்டினம் - காங்கேசன்துறை இடையிலான பயணிகள் கப்பல் போக்குவரத்துச் சேவை நாளை ஆரம்பிக்கப்படும் என உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று பரீட்சார்த்த நடவடிக்கைகள் இடம்பெற்றன. நேற்று காலை இந்தியா - நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்ட குறித்த கப்பல் பிற்பகல் 1.15 இக்கு காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்தக் கப்பலில் பணியாற்றும் 14 பணியாளர்கள் மட்டுமே இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கைகளின் போது வருகை தந்திருந்தனர் என்றும், குறித்த கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்தில் சுமார் அரை மணி நேரம் நங்கூரமிடப்பட்ட பின்னர் மதியம் 1.45 மணியளவில் மீண்டும் நாகப்பட்டினம் நோக்கி புறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைக்கு வருகை தந்த கப்பலுக்கு உற்சாக வரவேற்பளிக்கப்பட்டது. இதன்போது, கப்பல் சேவைக்குப் பயன்படுத்தப்படும் கடல் பாதை, கடல் மற்றும் காலநிலை நிலைவரம் போன்ற சகல விடயங்களும் கணக்கெடுக்கப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2 ▶

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 22 திங்கட்கிழமை 09.10.2023 கதிர் 88

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்



## வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு கிழக்கில் பூரண ஹர்த்தால்!

### தமிழ்க் கட்சிகள் அழைப்பு விடுப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை முன்னெடுப்பதற்கான பொது முடிவை எடுப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று யாழில் நடைபெற்றுள்ளது. இதில் வரும் 20 ஆம் திகதி குறித்த போராட்டத்தை நடத்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி ரி.சரவணராஜா உயிரச்சுறுத்தல் காரணமாக நாட்டைவிட்டு வெளியமை தொடர்பில் முழுமையான நீதிவிசாரணை நடத்த வலியுறுத்தியும், நீதித்துறையில் இருந்தாலும் தமிழர் என்பதால் இன ஒடுக்கு

2 ▶

## நீதி கோரி கறுப்புத்துணி கட்டியவாறு போராட்டம்!



முல்லைத்தீவு இளைஞர்களின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜாக்கு நீதி கோரி கண்டனப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

இன்று காலை 10.15 மணியளவில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாகக் கறுப்புத் துணியால் வாயைக் கட்டியவாறு அமைதியாக கவனயீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்ட பின்னர் மாவட்ட மேலதிக அரச அதிபர் க.கனகேஸ்வரனிடம் நீதி அமைச்சின் செயலாளருக்குக்

2 ▶

## துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு சந்தேகநபரைக் கைதுசெய்த பொலிஸ்

### வடமராட்சியில் பதற்றம்

யாழ்ப்பாணம், வடமராட்சி - அல்வாய் பகுதியில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபரைப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு இன்று கைது செய்தனர்.

அந்தப் பகுதியைச் சேர்ந்த நபரே துப்பாக்கிப் பிரயோகத்துக்கு இலக்காகிக் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பொலிஸ் பாதுகாப்பில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சந்தேகநபருக்கு எதிராக

2 ▶

## யாழ். உரும்பிராயில் வீடு உடைத்து கொள்ளை ஈடுபட்ட மூவர் சிக்கினர்

### மேலும் இருவரைத் தேடி வேட்டை

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் வீடு உடைத்து கொள்ளையில் ஈடு பட்ட குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் இருவரைக் கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றின் உரிமையாளர் குடும்பத்துடன், கடந்த சில தினங்களுக்கு முன்னர் மட்டக்களப்புக்குச் சென்றிருந்தார்.

ஒரு சில நாட்கள் மட்டக்களப்பில் உறவினர் வீட்டில் தங்கியிருந்த அந்தக் குடுமப்த்தினர் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது வீட்டுக்குத் திரும்பிய வேளை வீட்டின் கதவு உடைக்கப்பட்டு, வீட்டில் இருந்த மின் மோட்டார், தொலைக்காட்டி பெட்டி, மடிக்கணினி

2 ▶

## யாழில் பேஸ்புக்கில் வன்முறைக் கும்பல் தொடர்பில் பதிவிட்டவர் மீது வாள்வெட்டு!

### படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்ப்பு

முகநூலில் தம்மைப் பற்றி பதிவிட்டவர் மீது வன்முறைக் கும்பல் ஒன்று நேற்று இரவு வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணம், கந்தர்மடம் பகுதியை சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் மீதே அவரது வீட்டுக்கு அருகில் வைத்து வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வெள்ளை நிற கார் ஒன்றில் வந்த நான்கு பேர் கொண்ட வன்முறைக் கும்பலே தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில்

2 ▶

## நாட்டில் டெங்குப் பரவல் அதி தீவிரம் அவதானம் மிக்க பகுதிகள் அடையாளம்

நாட்டில் கடந்த வாரத்தில் மாத்திரம் 198 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்குநோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. இந்நிலையில், 7 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் அதி அவதானம் மிக்க பகுதிகளாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாதத்தில் இதுவரையான காலப்பகுதியில் 754 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வருடத்தில் 65,247 பேர் இதுவரை டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 38 பேர் உயிரிழந்துள்ளமை கவனிக்கத்தக்கது.

மேலும் மேல் மாகாணத்திலேயே அதிகமான நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், கொழும்பில் 13,704 பேரும்,

2 ▶

# இஸ்ரேலில் உள்ள இலங்கையர்களின் விபரங்கள் பெற விசேட தொலைபேசி

இஸ்ரேலில் தற்போது நிலவும் மோதல் காரணமாக இலங்கையர்கள் தொடர்பில் அறிந்து கொள்ள இரண்டு விசேட தொலைபேசி இலக்கங்களை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, ‚94716640560 என்ற வட்ஸ்அப் இலக்கம் அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 1989 என்ற தொலைபேசி இலக்கத்துடன் மூலம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் சுமார் 8,000 இலங்கையர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களில் 90 வீதமானோர் தாதியர் சேவையில் ஈடுபட்டுள்ளனர்.

இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்துடன் தொடர்பு கொண்டு இலங்கையர்களின் நிலைமை குறித்து தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார கேட்டறிந்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அவர் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

# சாந்தனின் வழக்கிலிருந்து விலகினார் நீதிபதி சுந்தர்

இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரி, ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான சாந்தன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணையில் இருந்து நீதிபதி சுந்தர்மோகன் விலகியுள்ளார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவரான சாந்தன் இலங்கையைச் சேர்ந்தவர். அவர் தன்னை இலங்கைக்கு திருப்பி அனுப்பக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவில், இலங்கையில் உள்ள தனது தாயார் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதால், உடனிருந்து அவரை கவனித்துக்கொள்ளும் வகையில் திருச்சி முகாமில் இருந்து விடுவித்து இலங்கைக்கு அனுப்ப வேண்டுமென கடந்த மாதம் மனு அளித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்த மனு மீது நடவடிக்கை எடுக்காத நிலையில் தன்னை இலங்கை அனுப்ப மத்திய, மாநில அரசுகளுக்கு உத்தரவிட வேண்டுமென மனுவில் கோரிக்கை வைத்திருந்தார். இந்த மனு நீதிபதிகள் எஸ்.எஸ். சுந்தர், சுந்தர் மோகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த வழக்கின் விசாரணையில் இருந்து விலகுவதாக நீதிபதி சுந்தர் மோகன் தெரிவித்தார்.

வழக்கறிஞராக இருந்தபோது ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்சநீதிமன்றத்தில் ஆஜரானதால், தற்போது வழக்கை தான் விசாரிப்பது முறையாக இருக்காது, என அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இந்த மனுவை வேறு நீதிபதிகள் அமர்வில் பட்டியலிட, தலைமை நீதிபதிக்கு பரிந்துரைக்கப்பட்டது.

## நாட்டில் டெங்குப் பரவல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கம்பஹாவில் 13,500 பேரும், களுத்துறையில் 4247 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மொத்த எண்ணிக்கையில் 48.2 வீதமாக 31,451 பேர் வரையில் பதிவாகியுள்ளது.

இதேவேளை மத்திய மாகாணத்தில் 7,205 பேரும், வடமேல் மாகாணத்தில் 5,391 பேரும், சப்ரகமுவ மாகாணத்தில் 5,427 பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இருப்பினும் இவ்வருடத்தில் கடந்த 9 மாதங்களுடன் ஒப்பிடுகையில் இம்மாதத்தில் குறைந்தளவான டெங்கு நோயாளர்களே பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## யாழில் பேஸ்புக்கில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வன்முறைக் கும்பலாக அடையாளம் காணப்பட்டுள்ள கும்பல் ஒன்றே தாக்குதலை மேற்கொண்டுள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்தக் கும்பலைப் பற்றி தனது முகநூலில் தாக்குதலுக்கு இலக்கான நபர் பதிவிட்டு இருந்த நிலையிலேயே வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## யாழ். உரும்பிராயில் வீடு உடைத்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையடக்கத் தொலைபேசி உள்ளிட்ட பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளமையை அவதானித்தனர்.

அது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் நேற்று சுன்னாகம் மற்றும் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த வீட்டில் இருந்து திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாகவும், அவற்றின் பெறுமதி 7 இலட்சம் ரூபாய் எனவும் தெரிவித்த பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரு சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ள நிலையில் அவர்களையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தனர். (அ)

## துப்பாக்கிப் பிரயோகம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் திருட்டு, வழிப்பறி, கொள்ளை உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிவான் நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளன.

அந்நிலையில் காங்கேசன்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் அண்மையில் இடம்பெற்ற குற்றச்செயலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் அவரைப் பொலிஸார் தேடி வந்தனர்.

அதன்போது அவர் அல்வாய் பகுதியில் பதுங்கியிருக்கின்றார் என்று கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் நேற்று அப்பகுதிக்கு விரைந்த பொலிஸார் அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்தபோது, அவரது உறவினர்களான பெண்கள் உள்ளிட்டவர்கள், பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர்.

அதனால் அங்கிருந்து திரும்பிய பொலிஸார் மீண்டும் இன்று மேலதிக பொலிஸாருடன் அப்பகுதிக்கு சென்று சந்தேகநபரைக் கைது செய்ய முற்பட்ட வேளை அவரின் உறவினர்கள் அவ்விடத்தில் கூடி பொலிஸாரின் நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தனர்.

அவ்வேளை சந்தேகநபர் அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்ட வேளை அவர் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அதன்பின்னர் காயங்களுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரைச் சிகிச்சைக்காகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பொலிஸார் சேர்த்தனர். அங்கு அவர் பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகின்றார். (அ)

## நீதி கோரி கறுப்புத்துணி ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையளிக்க மகஜர் கையளிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "நீதிபதிக்காக நீதி கேட்கும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு என்ன நீதியோ?", "நீதியின் கழுத்தில் தூக்குக் கயிறு, நீர்த்துப் போனதா நியாயத்தின் உணர்வு?", "நீதி தேவதையே நீயும் பெண்தானே, நீதி கிடைக்காத பெண்களுள் நீயும் ஒருத்தியோ?", "தொடர்ந்து நடந்தேறும் நீதி புரள்வுகளுக்கு என்ன தீர்ப்பு நீதி அமைச்சே?" போன்ற பல்வேறு வாசகங்களையுடைய பதாதைகளைத் தாங்கி நின்றனர்.

இந்தப் போராட்டத்தில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், மதகுருமார், கரைதுறைப்பற்று பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் இ.ஜெகதீஸ்வரன், சமூகச் செயற்பாட்டாளர் பீற்றர் இளஞ்செழியன் மற்றும் இளைஞர்கள் கலந்துகொண்டிருந்தனர். (அ)

## வரும் 20 ஆம் திகதி .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைக்குள்ளாகுவதை சுட்டிக்காட்டியும்- கண்டித்தும் தமிழ்த் தேசிய கட்சிகள் இணைந்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளன.

ஹர்த்தால் தொடர்பில் இறுதி முடிவை எடுக்கும் தமிழ்க் கட்சிகள் மற்றும் பொது அமைப்புக்களுடனான கலந்துரையாடல் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் இன்று பிற்பகல் 3.15 மணியளவில் ஆரம்பமானது.

குறித்த கலந்துரையாடலில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் விக்னேஸ்வரன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, செயலாளர் சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும், ரெலோ சார்பில் முன்னாள் தவிசாளர் நிரோஷ் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

## நாகப்பட்டினம் - காங்கேசன்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதையடுத்து, இந்தக் கப்பல் சேவையானது நாளை முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கப்பலில் 3 மணிநேரத்தில் தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் துறைமுகத்திற்குச் சென்றுவிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பயணிகள் தங்களுடன் 40 கிலோ எடையுள்ள பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாகை - இலங்கை கப்பலில் பயணம் மேற்கொள்வதற்கு ஒருவழிக் கட்டணமாக 27,000 ரூபாயும் இருவழிக் கட்டணமாக 53,500 ரூபாயும் அறவிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)






உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்







# கோப்பாய் ஆசிரிய கலாசாலை நூற்றாண்டு கல்விசார் ஆய்வு மாநாடு இன்று இடம்பெற்றது

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நூற்றாண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட கல்விசார் ஆய்வு மாநாடு இன்று காலை 8.30க்கு ஆரம்பமாகி பிற்பகல் வரை இடம்பெற்றது.

கோப்பாயில் கலாசாலை நிறுவப்படுவதற்கு பின்புலமாக இருந்த சேர் பொன்.இராமநாதன் பெயரிலும் காரைநகர் ச.அருணாசலம் உபாத்தியாயர் பெயரிலும் இரு அரங்குகள் அமைக்கப்பட்டு ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

மாநாட்டின் தொடக்க நிகழ்வு பொது அரங்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்துறைத் தலைவர் கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஸ்ட பேராசிரியர் தி.வேல்நம்பி ஆய்வு மாநாட்டு சிறப்புரையை ஆற்றினார். வெற்றி பெறுவதில் மனப்பாங்கின் வகிபாகம் என்ற பொருளில் அவரது உரை அமைந்தது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் வாழ்த்துரையையும், விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அரங்க அழைப்பாளர் உரையையும் வழங்கினர்.

ஆய்வுக்கட்டுரை அளிக்கைகளின் முதல் அமர்வு கலாசாலைக்கென காணியை வழங்கிய சேர் பொன் இராமநாதன் அரங்காக - யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆ. நித்திலவர்ணன் தலைமையில் நடைபெற்றது.

கோப்பாயில் ஆசிரிய கலாசாலையை நிறுவதற்கு அடித்தளமிட்ட காரைநகர் ச. அருணாகலம் உபாத்தியாயர் பெயரில் இரண்டாவது அரங்கு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி சு. பரமானந்தம் தலைமையில் நடைபெற்றது.

இதில் அருணாசலம் உபாத்தியாயர் குடும்பத்தினரும் பங்கேற்றனர். பாடசாலை ஆசிரியர்கள், பல்கலைக்கழக, தேசியக் கல்வி நிறுவக, கலாசாலைகள் மற்றும் கல்வியியற் கல்லூரிகளின் விரிவுரையாளர்கள் ஆய்வுக் கட்டுரை களைச் சமர்ப்பித்தனர்.

ஆய்வுக்கட்டுரைகளை உள்ளடக்கிய 150 பக்கங்கள் கொண்ட ஆய்வு மாநாட்டு மலரும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (04)

# அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய கலாசார மண்டப அடிக்கல் நாட்டு விழா



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தின் நீண்ட நாள் தேவையாக இருந்த கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இஸ்லாமிக் ரிலீப் கொமிட்டியின் அனுசரணையுடன் இன்று அதிபர் எம் ஏ. அன்சார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பிரதம அதிதிகளாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், அக்கரைப்பற்று வலய கல்வி பணிப்பாளர் ஏ.எம். ரஹ்மத்துல்லாஹ் ஆகியோரும், கௌரவ அதிதிகளாக பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபிர், இலங்கை வதிவிடப் பணிப்பாளர் ஏ.எம். மிஹ்லார், ஐளுசுஊ இலங்கை ஒருங்கிணைப்பு ஆலோசகர் ஏ.எல்.ஜுனைதீன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம் எச் எம். ரஷ்மி, அனைத்து பள்ளிவாசல் தலைவர் சட்டத்தரணி எம்.எஸ்.ஜுனைதீன் மற்றும் கலாச்சார உத்தியோகத்தர் எம்.எஸ்.ஜௌபர் ஆகியோருடன் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கனடாவில் சிறிய ரக விமானம் விபத்து பயிற்சி விமானிகள் உட்பட மூவர் மரணம்



கனடாவில் நிகழ்ந்த விமான விபத்தில் மும்பையைச் சேர்ந்த இரு பயிற்சி விமானிகள் உள்பட மூவர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணம் சில்லிவாக் நகர விமான நிலையத்தின் அருகே தங்கும் விடுதியின் பின்னால், சிறிய விமானம் ஒன்று விழுந்து நொறுங்கி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் விமானத்தில் இருந்த அபய் கட்ரு (25), யஷ் ராமுகடே (25) ஆகிய பயிற்சி விமானிகள் உயிரிழந்தனர். இருவரும் மும்பையைச் சேர்ந்தவர்கள். விபத்தில் விமானத்தை ஓட்டிய விமானியும் உயிரிழந்தார்.

எதனால் விபத்து ஏற்பட்டது என்பது தெரியவில்லை. அது குறித்து விசாரணை மேற்கொள்ள அதிகாரிகள் அனுப்பப்பட உள்ளதாக கனடா போக்குவரத்துப் பாதுகாப்புக் குழுமம் கூறியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. விபத்தில் உயிரிழந்த விமானி குறித்த தகவல் வெளியாகவில்லை. (04)



# மூன்றாவது நாளாகத் தொடரும் ஹமாஸின் தாக்குதலில் 700 பேர் பலி - 2000 பேர் காயம்!



தெற்கு இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்தும் தாக்குதல் 3வது நாளாக இன்றும் தொடர்கிறது. இந்த தாக்குதலில் நேபாள நாட்டவர்களும் கொல்லப்பட்டதாக இமாலய நாட்டின் தூதர் நேற்று உறுதிப்படுத்தியுள்ளார்.

கடந்த 7ஆம் திகதி பலஸ்தீனத்தின் காஸா பகுதியிலிருந்து ஹமாஸ் படையினர் இஸ்ரேல் மீது திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் 700க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். 2000 பேர் காயமடைந்துள்ளனர். இதற்கிடையில் நூற்றுக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளனர். இந்தக் கொடூரத் தாக்குதலில் பலியானவர்களில் 260 பேரின் உடல்கள் இஸ்ரேல் – காசா எல்லைக்கு அருகில் இசை விழா நடந்த இடத்தில் கண்டெடுக்கப்பட்டன.

இஸ்ரேலிய நாட்டினரைத் தவிர அமெரிக்கர்களும் அங்கு கொல்லப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அதேநேரத்தில் உக்ரைன் அதிபர் வோலோடிமீர் ஜெலென்ஸ்கி, இந்தத் தாக்குதலில் உக்ரேனியர்களும், மெக்சிகோ, பிரேசில், நேபாளி நாட்டைச் சேர்ந்தவர்களும் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறியுள்ளார்.

யூதர்களின் ‘சிமாசாட் தோரா’ விடுமுறை தினமான சனிக்கிழமை காலை 6.30 க்கு ஹமாஸ் படையினர் தெற்கு இஸ்ரேல் பகுதியில் ரொக்கெட்டுகளை வீசியும், நிலம், நீர், வான் வழியாக உள்ளே ஊடுருவியும் தாக்குதல் நடத்தினர்.

மோட்டார் பொருத்திய பாராகிளைடரில் ஹமாஸ் படையினர் இஸ்ரேல் எல்லைக்குள் வான் வழியாக இறங்கினர். விடுமுறை தினக் கொண்டாட்டத்தில் இருந்த இஸ்ரேல் ராணுவம் இதைச் சற்றும் எதிர்பாராத நிலையில், ஹமாஸ் படையினர் வீசிய 5,000 க்கும் மேற்பட்ட ரொக்கெட் குண்டுகளை இஸ்ரேலின் தானியங்கி ஏவுகணைத் தடுப்பு அமைப்பு இடைமறித்து அழித்ததாகக் கூறப்படுகிறது.

எனினும், சில ரொக்கெட் குண்டுகள் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்ததால் பலத்த சேதம் ஏற்பட்டதாகவும், இஸ்ரேல் எல்லையில் அமைக்கப்பட்டுள்ள வேலியை உடைத்துக் கொண்டு 7 இடங்களில் ஹமாஸ் படையினர் உள்ளே நுழைந்ததாகவும், அவர்களுடன் இஸ்ரேல் படையினர் தீவிர துப்பாக்கிச் சண்டை நடத்தி வருவதாகவும் இஸ்ரேல் ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

நீண்ட காலமாக நடைபெற்று வரும் இஸ்ரேல் – ஹமாஸ் சண்டையில் இது மோசமான தாக்குதலாகக் கருதப்படுகிறது. (04)



# ஆப்கானிஸ்தானில் பயங்கர நிலநடுக்கம் உயிரிழந்தோர் எண்ணிக்கை 2,000 ஆகியது

ஆப்கானிஸ்தானில் சனிக்கிழமை ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர்எண்ணிக்கை 2,000ஆக அதிகரித்துள்ளது.

கடந்த 20 ஆண்டுகளில் அந்த நாட்டில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்தில் இதுவும் ஒன்றாகக் கருதப்படுகிறது.

ஆப்கானிஸ்தானின் ஹெராத் நகருக்கு வடமேற்கே 40 கி.மீ. தொலைவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் சனிக்கிழமை ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 6.3 அலகுகளாக நிலநடுக்கம் பதிவானது. அதைத் தொடர்ந்து, மூன்று முறை கடுமையான நிலநடுக்கங்களும், குறைந்த அளவிலான நில அதிர்வுகளும் உணரப்பட்டன.

நிலநடுக்கம் மற்றும் அதற்குப் பிந்தைய அதிர்வுகளில் சிக்கி சுமார் 300 பேர் உயிரிழந்ததாக முதல்கட்டத் தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், நிலநடுக்கத்தில் சுமார் 2,000 பேர் உயிரிழந்துள்ளதாக தலிபான் அரசின் செய்தித் தொடர்பாளர் அப்துல் வாஹித் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். ஆறு கிராமங்கள் அடியோடு அழிந்துவிட்டதாகவும், இடிபாடுகளில் நூற்றுக்கணக்கானோர் புதையுண்டுவிட்டதாகவும் அவர் கூறினார்.

ஹெராத் மாகாணத்தின் ஜெண்டாஜன் மாவட்டத்தில் உள்ள நான்கு கிராமங்கள் நிலநடுக்கத்தால் பேரழிவைச் சந்தித்திருப்பதாகப் பேரிடர் ஆணையச் செய்தித் தொடர்பாளர் மொகமட் அப்-துல்லா தெரிவித்தார்.

நிலநடுக்கத்தில் சுமார் 600 வீடுகள் இடிந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் மையம் கொண்டிருந்த ஹெராத் மாகாணம், ஈரான் எல்லையையொட்டி உள்ளது. நிலநடுக்கத்தின் தாக்கம் அருகில் உள்ளபரா, பத்கிஸ் மாகாணங்களில் உணரப்பட்டதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களுக்கு தலிபான் அரசின் துணைப் பிரதமர் அப்துல் கானி பராதர் இரங்கல் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ளுமாறு உள்ளூர் அமைப்புகளுக்கு தலிபான் அரசு உத்தரவிட்டுள்ளது.

நிலநடுக்க பாதிப்பு பகுதிகளில் உலக சுகாதார அமைப்பும் நிவாரணப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

கிழக்கு ஆப்கானிஸ்தானின் மலைப் பகுதி பிராந்தியத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சுமார் 1,000 பேர் உயிரிழந்தனர், 1,500 பேர் காயமடைந்தனர் என்பது நினைவுகூரத்தக்கது. (04)

# திபெத் மலையில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி இருவர் உயிரிழப்பு – இருவரைக் காணவில்லை



சீனாவின் தன்னாட்சிப் பகுதியான திபெத்தில் உள்ள மலையில் சனிக்கிழமை ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி 2 பேர் உயிரிழந்ததாகவும், இருவரைக் காணவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்த 52 மலையேற்ற வீரர்கள், சிஷாபங்மா மலையில் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்தபோது, மலையின் 7,600 மீற்றர் மற்றும் 8,000 மீற்றர் உயரங்களில் பனிச்சரிவு ஏற்பட்டது. இதில் அமெரிக்காவைச் சேர்ந்த மலையேற்ற வீரர் அன்னா குடு, நேபாளத்தைச் சேர்ந்த மலையேற்ற வழிகாட்டி மிங்மார் ஷெர்பா ஆகியோர் உயிரிழந்ததாகவும், அமெரிக்க மலையேற்ற வீரரும் நேபாள மலையேற்ற வழிகாட்டியும் காணாமல் போனதாகவும் சீன அரச ஊடகம் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது.

பனிச்சரிவில் சிக்கிப் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்ட நேபாள மலையேற்ற வழிகாட்டி கர்மா கெல்ஜென் ஷெர்பா, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். அவரது உடல்நிலை சீராக உள்ளதாகக் கூறப்படுகிறது.

பனிப்பொழிவின் காரணமாக மலையேற்ற நடவடிக்கை தடைசெய்யப்பட்டிருக்கிறது.

கடல்மட்டத்திலிருந்து 8,027 மீற்றர் உயரம்கொண்ட சிஷாபங்மா மலை, உலகின் 14ஆவது உயரமான மலைச் சிகரமாகும். தென்மேற்குப் பருவமழை முடிவடைந்த பிறகு, ஒக்டோபர் மாதத்தில் இமயமலைப் பகுதிகளில் மலையேற்ற நடவடிக்கைகள் தொடங்குவது வழக்கம். ஆனால், பருவநிலை மாற்றத்தின் காரணமாக இந்தப் பிராந்தியத்தில் பனிசரிவு நிகழ்வுகள் அதிகரித்து வருவதாக வல்லுநர்கள் எச்சரித்து வருகின்றனர்.

இந்தியப் பிராந்திய இமயமலைப் பகுதிகளில் கடந்த இரு ஆண்டுகளில் ஏற்பட்ட பனிச்சரிவுச் சம்பவங்களில் சிக்கி 120 பேர் உயிரிழந்தனர் என்பது கவனிக்கத்தக்கது. (04)

ஆஷா ஏஜென்சீஸ் லிமிடெட்,
ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியாவுடன்
இணைந்து,
நாகப்பட்டினத்துக்கும்
காங்கேசன்துறைக்கும்
இடையே
பயணிகள் கப்பல் சேவையை
அறிமுகப்படுத்துகிறது.

PERSHIP SINCE 1889



அக்டோபர் 10ஆம் தேதி முதல் சேவைகள் ஆரம்பமாகிறது.

ஒரு வழி பயணச்சீட்டின் விலை ரூ 27,000/-
இருவழி பயணச்சீட்டின் விலை ரூ 53,500/-

பயண நேரம் 3 மணித்தியாலங்கள்.
பயணப்பொதியின் நிறை 50 கிலோ வரை கொண்டு செல்லலாம்..
திரும்ப வரும் தேதி ஒரு வாரத்திற்குள் உறுதி செய்யப்பட வேண்டும்.

இந்தியாவிற்கு செல்ல செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் விசா அவசியம்.

பயணச்சீட்டு பதிவுகளுக்கு :

JAFFNA AIR SERVICES (PVT) LTD,
நல்லூர், யாழ்ப்பாணம்.
Call : + 94 70 3788795.
Whats app : + 94 755 788688.

Jaffna Air Services (Pvt) Ltd

# தேசியமட்ட பெண்கள் உதைபந்தாட்டம் 17 வயது அணி சாம்பியனாகியது



கல்வி அமைச்சினால் நடாத்தப்படும் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரியின் 17 வயது அணி சாம்பியனாகியுள்ளது. இப்போட்டி இன்று காலை 9.30 மணிக்கு யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் குருநாகல் கவுசிகம மத்திய கல்லூரியை எதிர்கொண்ட மகாஜனா 3 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. மகாஜனா முதல்பாதி ஆட்டத்தில் ஒரு கோலையும் இரண்டாவது பாதி ஆட்டத்தில் 2 கோல்களையும் பெற்றுக்கொண்டது.

மகாஜனா தொடர்ந்து இரண்டாவது வருடமாக சாம்பியனாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடமே (2022) 17 வயதுப் பெண்கள் உதைபந்தாட்டப்போட்டி ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பித்த ஆண்டே மகாஜனா முதல் அணியாகச் சம்பியனாகி வரலாற்றுப் பதிவை ஏற்படுத்தியது. தொடர்ந்து இரண்டாவது வருடமாகவும் சம்பியனாகியுள்ளது.

# வட மாகாணத்துக்கான இலங்கை வருமான பரிசோதகர்கள் சங்கம் அங்குரார்ப்பணம்



வடக்கு மாகாணத்துக்கான இலங்கை வருமானப் பரிசோதகர்கள் சங்கத்தின் உடைய அங்குரார்ப்பண பொதுக் கூட்டமானது 7 ஆம் திகதி யாழ் பொது நூலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு.செ.பிரணவநாதன் கலந்துகொண்டார்.

தொழிற் சங்கத்திற்கான வாழ்த்துச் செய்தியை தெரிவித்ததோடு, வருமானப் பரிசோதகர்களது தொழிற் சங்கக் கோரிக்கைகளை நிறைவேற்ற தன்னாலான ஒத்துழைப்புக்களை வழங்குவதாக அவர் உறுதியளித்தார்.

வடக்கு மாகாண வருமானப் பரிசோதகர்களது பேராதரவோடு தொழிற் சங்கம் உத்தியோகபூர்வமாக செயல்வலுப் பெற்றது.

தொழிற் சங்கத்தின் முதலாவது நிர்வாக சபையின் தலைவராக திரு.ச.போல் தர்சாந், செயலாளராக திரு. கோ.ஜெகஜீவன், பொருளாளராக திருமதி.ஜோ.ஆரினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

# பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்னவின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படலாம்

தற்போதைய பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்கிரமரத்னவின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன பொலிஸ் சேவையில் இருந்து 2023 மார்ச் 26 இல் ஓய்வு பெறுவார் என முதலில் கூறப்பட்டிருந்த போதிலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏப்ரல் 6ஆம் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அவரது பதவிக் காலத்தை ஜூன் 26 ஆம் திகதி வரை மூன்று மாதங்களுக்கு நீடித்தார்.

பின்னர் ஜூலை 9ஆம் திகதி அவருக்கு மேலும் 3 மாத சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

எவ்வாறாயினும், புதிய பொலிஸ்மா அதிபரை நியமிப்பதா அல்லது தற்போதைய பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்னவுக்கு மீண்டும் சேவை நீடிப்பு வழங்குவதா என்பது தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது (அ)

# நாவிதன்வெளி அன்னமலை வித்தியாலய மாணவர் நாடாளுமன்றத் தேர்தல் இன்று



(காரைதீவுச் செய்தியாளர்)

நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலய மாணவர் நாடாளுமன்ற தேர்தல் நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் முன்னிலையில் இன்று பாடசாலையில் நடைபெற்றது.

அதற்கு சம்மாந்துறை வலய தேர்தல் தொடர்பான உத்தியோகத்தர் உதவிக்கல்விப் பணிப்பாளர் நைரோஸ்கான், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கண்காணிப்பாளர்களாகச் சமுகமளித்திருந்தனர்.

மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடாளுமன்றத் தேர்தல் சட்ட திட்டங்களின் அடிப்படையில் இத்தேர்தல் இடம்பெற்றது.




JRIDE
BEYOND THE ROAD
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
jride
JRide - Beyond the Road
Speed IT net • Travel & Local
JRide Driver: Drive & Deliver
Speed IT net • Travel & Local
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

# நியூசிலாந்து - நெதர்லாந்து அணிகள் இன்று மோதல்!



உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இன்றைய போட்டியில் நியூசிலாந்து - நெதர்லாந்து அணிகள் விளையாடுகின்றன. நாணயச் சுழற்சி யில் வெற்றி பெற்ற நெதர்லாந்து அணி, நியூசிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்துள்ளது.

50 ஓவர்களில் நியூசிலாந்து அணி 7 விக்கெட்டுகளை இழந்து 322 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2023இல் வெளியிடப்பெற்றது.